RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
# MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 283 | அக்டோபர் 16, 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தூத்துக்குடி மீனவர்களை மீட்க நடவடிக்கை தேவை: வெளியுறவு மந்திரிக்கு முதல்-அமைச்சர் விஜய் கடிதம்

சென்னை, அக்.16-

மாலத்தீவு கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 25 மீனவர்களை விடுவிக்கவும் அவர்களின் 3 மீன்பிடி விசைப் படகுகளை மீட்கவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளக்கோரி மத்திய வெளியுறவுத் துறை மந்திரிக்கு தமிழ்நாடு ஜோசப் விஜய் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் தெரிவித்து இருப்பதாவது;

"தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள், அவர்கள் பயன்படுத்திய மூன்று மீன்பிடி விசைப்படகுகளுடன், மாலத்தீவு கடலோரக் காவற்படையினரால் 13.10.2026 அன்று அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விவகாரத்தில் மத்திய வெளியுறவுத் துறை மந்திரி தலையிட்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மேலும், இவ்விவகாரம் தொடர்பாக மாலத்தீவு அரசுடன் தூதரகத்தின் வாயிலாகப் பேச்சுவார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவும், அவர்களது மீன்பிடி விசைப்படகுகளை உடனடியாக மீட்பதற்கும், மீனவர்கள் பாதுகாப்பாகத் தாயகம் திரும்புவதை உறுதி செய்யவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மத்திய வெளியுறவுத் துறை மந்திரி, இவ்விவகாரத்தில் தலையிட்டு, தக்க நடவடிக்கை மேற்கொள்வது, பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த மீனவ சமூகத்திற்கும் மிகுந்த நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கும்."

இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்-அமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.



## "அதிமுகவில் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் வந்துவிட்டது" - சசிகலா

சென்னை: அக்.16-

'அதிமுகவில் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் வந்துவிட்டது. இதற்கு மேலும், வேடிக்கை பார்த்து கொண்டிருந்தால் அதிமுகவை காப்பாற்றுவது மிகவும் கடினமாகிவிடும்' என சசிகலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்து தற்போது 54ஆண்டுகளை நிறைவு செய்து, 55வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதனை கொண்டாடி மகிழும் கோடான கோடி தொண்டர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

1972-ஆம் ஆண்டு எம்ஜிஆரால் ஏழைகளுக்காகவே உருவாக்கப்பட்ட இயக்கம் தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இந்த இயக்கத்தை தனது இறுதி மூச்சுவரை காப்பாற்றியவர் எம்ஜிஆர். அவரின் மறைவிற்கு பிறகு ஜெயலலிதா இந்த இயக்கத்தை கட்டி காப்பாற்றினார்கள்.

இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கினார்கள். இதில் எனது



பங்கும் அடங்கியிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. நான் நேசித்த நம் இருபெரும் தலைவர்கள் தான், நான் இந்த இயக்கத்தை சுவாசிக்க காரணமாக அமைந்தவர்கள்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு இந்த இயக்கம் பல்வேறு சறுக்கல்களையும், தோல்விகளையும் தான் இன்று வரை சந்தித்து கொண்டு இருக்கிறது. இதற்கு ஒரு சிலரின் சுயநலம் மற்றும் அவர்கள் எடுத்த தவறான முடிவுகள் தான் காரணமாக அமைந்துவிட்டது. இந்த இயக்கத்தின் பலனை அனுபவித்த ஒரு சிலர் மட்டும் ஏதாவது ஆதாயம் தேடி இயக்கத்தை விட்டு சென்று இருக்கலாம்.

ஆனால், அதே சமயம் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா வழியில் வந்த தொண்டர்கள் இன்றைக்கும் நம்பிக்கையோடும், உறுதியோடும் தொடர்ந்து பயணித்து கொண்டிருக்கிறார்கள்.

தொண்டர்கள் அனைவருக்கும் இருக்கும் ஒரே எண்ணம் என்னவென்றால், இந்த இயக்கம் என்றைக்கு ஒன்றுபடும். பிரிந்து சென்றவர்கள், விலக்கப்பட்டவர்கள், ஒதுங்கி நிற்பவர்கள் என அனைவரும் ஒன்றிணையும் காலம் எப்போது? என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து காத்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே, இது நாள் வரை "நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்" என்று சொன்ன அண்ணாவின் கொள்கைகளை மனதில் வைத்து தொண்டர்களின் எண்ணங்கள் ஈடேறிட அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் வந்துவிட்டது. இதற்கு மேலும், வேடிக்கை பார்த்து கொண்டிருந்தால் இந்த இயக்கத்தை காப்பாற்றுவது மிகவும் கடினமாகிவிடும்.

"இன்னும் நூற்றாண்டுகள் ஆனாலும் இந்த இயக்கம் மக்களுக்காகவே இயங்கும்" என்று எந்த நம்பிக்கையில் ஜெயலலிதா சூளுரைத்தார்களோ, அந்த நம்பிக்கை என்றைக்கும் வீண் போய்விடக்கூடாது என்பதை மிகவும் வலியுறுத்தி கேட்டுகொள்கிறேன்.

இந்த இயக்கம், ஒன்றுபட்ட, வலிமைமிக்க, பேரியக்கமாக மீண்டும் மலர வேண்டும் எனவும், மீண்டும் அம்மாவின் ஆட்சியை தமிழகத்தில் கொண்டு வர வேண்டும் எனவும், தமிழக மக்களுக்கு மீண்டும் ஒரு பொற்கால ஆட்சியாக அது அமையட்டும் எனவும் இந்நாளில் எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் என்னென்ன? அமைச்சர் செங்கோட்டையன் விளக்கம்

சென்னை, அக்.16-

"வடகிழக்கு பருவ மழையை பொறுத்தவரை, மக்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் செங்கோட்டையன் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் வானிலை ஆய்வு மையம், காவல்துறை, கடற்படை, பேரிடர் மேலாண்மை அதிகாரிகளுடன் இந்த ஆலோசனை நடந்தது.

பின்னர், இது குறித்து அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் பேசுகையில், "வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை, மக்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள், அனைத்து துறைகளின் சார்பில் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு நடந்த சம்பவங்களைப் பொறுத்து தற்போது நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

பெரும் மழையால் மின்சாரப் பிரச்சினை வந்தால், ஆங்காங்கே ஜெனரேட்டர்கள் சரியாக உள்ளதா என சரிபார்க்கப்பட்டு வருகிறது. சென்னை உள்ளிட்ட பல்வேறு கடலோரப் பகுதிகளில் வெள்ளம் வரும்போது, அப்பகுதி மக்களை பாதுகாப்பது குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை வரும்போது, மக்களுக்கு இடர்பாடுகள் இல்லாமல், பொருட்சேதம் இல்லாமல், சாலைகளில் தண்ணீர் தேங்காமல் மின்சாரம் தடையில்லாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து பகுதிகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். சென்னையை பொறுத்தவரை 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கு உயர் அதிகாரிகள், பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சூப்பர் எல் நினோ மூலம் நமக்கு கூடுதல் எச்சரிக்கை கொடுப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மாநில அரசுக்கு எவ்வளவு நிதி வழங்க வேண்டும் என மத்திய அரசு தான் முடிவு செய்யும். நாங்கள் அதற்கான கோரிக்கைகளை விடுப்போம். நிவாரணம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படும்" இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## "எஸ்ஐஆர் விவகாரத்தில் முதல்வர் விஜய் பதவி விலகத் தயாரா?" - நயினார் நாகேந்திரன்

சென்னை: அக்.16-

'எஸ்ஐஆர் நடைமுறைக் பிறகு பதவிக்கு வந்தவர்கள் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் என்ற காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கேவின் கருத்தை தவெக ஏற்றுக்கொள்கிறதா? 'நான் சட்டவிரோத முதல்வர்' என்பதை ஒப்புக்கொண்டு விஜய் பதவி விலகத் தயாரா?' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'எஸ்ஐஆருக்கு எதிராக போர்க்கொடி பிடிக்கிறதா தவெக? கூட்டணி விசுவாசத்துக்காக இந்திய அரசியலமைப்பை எதிர்க்க துணிந்துவிட்டாரா முதல்வர் விஜய்?

அனைத்து மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் வகையில், போலி வாக்காளர்களை கண்டறிதல், வாக்காளர் கணக்கெடுப்பு, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு உட்பட பல செயல்முறைகளை முன்னெடுத்து வரும் எஸ்ஐஆருக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றுள்ள தவெகவுக்கு எனது கடும் கண்டனங்கள்.

நாடாளுமன்றம், சட்டமன்றம்,



உள்ளாட்சி, கிராமசபை என நாடு முழுவதிலும் நடக்கும் அனைத்து தேர்தல்களிலும் படுதோல்வியை சந்தித்து வரும் காங்கிரஸ், தங்கள் கையாலாகாத்தனத்தை மறைக்க தேர்தல் ஆணையத்தின் மீதும், எஸ்ஐஆர் மீதும், இவிஎம் இயந்திரங்கள் மீதும் பழி போட்டு வருகிறது.

"வாக்கு திருட்டு" நடந்ததற்கான ஆதாரங்களைக் கேட்டால், "ஆடு திருடு போகவில்லை, திருடு போன மாதிரி கனவு கண்டேன்" என்ற நகைச்சுவை வசனம் போல, "எந்த ஆதாரமும் இல்லை, ஆனால் நான் உணர்கிறேன்" என்று மழுப்புகிறார் ராகுல் காந்தி.

இப்படிப்பட்டவர்களுடன் இணைந்து கொண்டு, தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ள முதல்வர் விஜய், எஸ்ஐஆருக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பது, மிகப் பெரிய அரசியல் பிழை. மண் குதிரையை நம்பி யாராவது நட்டாற்றில் இறங்குவார்களா?

மேலும், கேரளாவைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான ரமேஷ் சென்னிதலா, எஸ்ஐஆர்- யை வரவேற்றுள்ளார். எஸ்ஐஆர் - க்குப் பிறகு, கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தது, தமிழகத்தில் தவெக ஆட்சிக்கு வந்தது, அரை நூற்றாண்டுக்கு பிறகு காங்கிரஸுக்கு தமிழக அமைச்சரவையில் இடமும் கிடைத்தது.

அதுமட்டுமன்றி, எஸ்ஐஆர் மூலமாக, நிரந்தரமாக இடம்பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், இரட்டை வாக்குரிமை கொண்டவர்கள் உட்பட சுமார் 13 கோடி பேர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அப்படியென்றால், இறந்த வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைத் தக்க வைத்துக்கொண்டு தனக்கு வாக்களிக்க வேண்டும் என ராகுல் காந்தி விரும்புகிறாரா? முதல்வர் விஜய் அதை ஆமோதிக்கிறாரா?

மேலும், எஸ்ஐஆருக்குப் பிறகு பதவிக்கு வந்தவர்கள் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் என்ற காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கேவின் கருத்தை தவெக ஏற்றுக்கொள்கிறதா? 'நான் சட்டவிரோத முதல்வர்' என்பதை ஒப்புக்கொண்டு விஜய் பதவி விலகத் தயாரா?' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.



## போதைப்பொருளுக்கு எதிராக 1,810 கி.மீ. பைக் பேரணி: டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் தொடங்கி வைத்தார்

சென்னை, அக்.16-

போதைப்பொருளுக்கு எதிராக 5 மாநிலங்கள் வழியாக 1,810 கி.மீ. பைக் பேரணியை டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் சென்னையில் தொடங்கி வைத்தார்.

தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு, "போதைப்பொருளுக்கு எதிரான போராட்டம்" என்ற கருப்பொருளை மையமாக கொண்டு காவல் துறையினர் பங்கேற்ற தேசிய பைக் பேரணி சென்னை மெரினா கடற்கரை சாலையில் நேற்று நடந்தது. இதை டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், கூடுதல் டிஜிபி-க்கள் சங்கர், தினகரன், மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு ஐ.ஜி. சுதாகர் உள்ளிட்ட உயர் போலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சென்னையில் தொடங்கிய இந்த பேரணி ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய 5 மாநிலங்களை கடந்து செல்கிறது. மொத்தம் 14 நாட்கள் 1,810 கிலோ மீட்டர் தூரத்துக்கு இந்த பேரணி நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில், டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் பேசியபோது, 'தமிழகத்தில் இந்த ஆண்டில் இது வரை 12,595 வழக்குகள் போதைப்பொருள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டு 18 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

23 ஆயிரம் கிலோ கஞ்சா, 10 லட்சத்திற்கும் மேல் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



■ திருப்பத்தூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பணியாண்டபள்ளி ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்.இ.ஆ.ப.,(14.10.2026) அன்று ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவின் தரம், குழந்தைகளின் வருகைப் பதிவேடு, பராமரிப்பு, சுகாதார வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் செள.தமிழரசி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்/தணிக்கை) தெற்கு அருணாசலம், சோலையார்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெ.மணவாளன் மற்றும் உதவி பொறியாளர் செல்வி.ர ஷாதபசும் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அடுத்த அணைப்பாக்கத்தில் எஸ் ஆர் ஆயில் எத்தனால் ஆலை அடிக்கல் நாட்டு விழா வெகு பிரம்மாண்டமாக நடைபெற்றது, இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்தி ராஜ், மற்றும் ஐஏஎஸ் சுப்பிரமணி ஐஏஎஸ் செந்தில்குமார் கலந்துகொண்டு சிறப்பித்தனர், வருகை தந்த அனைவரையும் எஸ் ஆர் ஆயில் உரிமையாளர் சிவக்குமார் வரவேற்று உபசரித்தார், இதில் தொழிலதிபர்கள் மற்றும் ஏராளமான அப்பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### உதகை அணிக்கொரை கிராம சமுதாய கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில்

# நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரூ.1.79 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்டஉதவிகளை வழங்கினார்

நீலகிரி, அக்.16-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், தூனேரி, அணிக்கொரை கிராம சமுதாய கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு 48 பயனாளிகளுக்கு ரூ.1.79 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.



ஒவ்வொரு மாதமும் மக்கள் தொடர்பு முகாம் மூலமாக அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் நேரடியாக கிராமப் பகுதிகளுக்கு சென்று அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பதோடு, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவது தான் மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும். அதன்படி இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.20,000/- மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையினையும், மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் 1 பயனாளிக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவியும், 1 மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.20 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளையும், மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் 3 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் சுய உதவிக்குழு கடனுதவிகளையும், 3 பயனாளிகளுக்கு ரூ.2.10 இலட்சம் மதிப்பில் விவசாய கடனுதவிகளையும், வேளாண் பொறியியல் துறை சார்பில் 1 பயனாளிக்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பில் உழுவை இயந்திரத்தினையும், 2 பயனாளிகளுக்கு ரூ.78,000/- மதிப்பில் பவர் வீடர்களையும், 1 பயனாளிக்கு ரூ.1.48 இலட்சம் மதிப்பில் பவர் டில்லரையும், தோட்டக்கலைத்துறை சார்பில், 1 பயனாளிகளுக்கு ரூ.90,000/-மதிப்பில் நீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் 1 பயனாளிக்கு ரூ.20,553/- மதிப்பில் தெளிப்பு நீர் பாசன கருவியினையும், மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.5,000/- மதிப்பில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகங்களையும், 2 பயனாளிகளுக்கு ரூ.4,000/- மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களையும், தமிழ்நாடு ஊரக ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 14 பயனாளிக்கு ரூ.21 இலட்சம் மதிப்பில் சமுதாய முதலீட்டு நிதியுதவியினையும், 2 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சம் மதிப்பில் வங்கி கடன் இணைப்பினையும், சிங்கபெண் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளையும் என மொத்தம் 48 பயனாளிகளுக்கு ரூ.1.79 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பொது மக்கள் அனைவரும் தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை அறிந்து பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மகளிர் திட்ட இயக்குநர் .ரூபன் சங்கர்ராஜ், உதகை வருவாய் கோட்டாட்சியர் டினுஅரவிந்த், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) .தீபாசித்ரா, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமசாமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சிவசங்கர், உதகை வட்டாட்சியர் சதீஷ்வர நாயக், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், சந்திரசேகர் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

# தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர்.வ.சிவகிருஷ்ணமூர்த்தி,நேரில் பார்வையிட்டு ஆய்வு

ஆண்டிபட்டி அக்.16-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர். வ.சிவகிருஷ்ணமூர்த்தி,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், பிச்சம்பட்டி ஊராட்சியில் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டட கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு,

உரிய காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், தற்பொழுது தற்காலிகக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் விவரம் குறித்து கேட்டறிந்ததுடன், பதிவேடுகளை முறையாகப் பராமரித்து, நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, ஆண்டிபட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு பயின்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்ததுடன், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து, அங்குப்பயிலும் மாணவர்களுடன் கலந்துரையாடி அனைவரும் நன்றாகப் படித்து அதிகப்படியான மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து உயர்கல்வி பயின்று வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

பின்னர், ஆண்டிபட்டி கூட்டுறவு பண்டக சாலை நியாய விலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து பார்வையிட்டு, குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை விவரம் குறித்து பணியாளர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், பாலக்கோம்பை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு பராமரிக்கப்பட்டுவரும் ரொக்கப்பதிவேடு, வரி இனங்கள் பதிவேடு உள்ளிட்டப் பதிவேடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, அப்பகுதி மக்களிடம் குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறதா என்பது குறித்து கேட்டறிந்ததுடன், தரைமட்ட மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் முறையாக குளோரினேசன் செய்து விநியோகம் செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில், செயற்பொறியாளர் (வளர்ச்சி) மீனாகுமாரி, வட்டார வளர்ச்சி அலுவ லர்கள். ராகவன், பாலகிரு ஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர். சுருளிவேல், தலைமையாசிரியர்.செந்தில்குமரன் மற்றும் அரசு அலுவர்கள் பலர் உடனிருந்தனர்.




## ஊத்துக்கோட்டையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு சி ஐ டி யு ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

திருவள்ளூர், அக்.16-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் சி.ஐ.டி.யு. ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே வெற்றிப் பயண பேருந்து திட்டத்தால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் ஆட்டோ ஒட்டுனர்கள் குடும்பத்தை காப்பாற்றும் நோக்கில் இலவச வெற்றி பயண திட்டத்தை தமிழக அரசு கைவிட வலியுறுத்தி சி.ஜ.டி.யு. ஆட்டோ ஒட்டுனர் சங்கத்தின் தலைவர் தியாகு தலைமையில் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி பொருளாளர் காட்டையன் முன்னிலையில் 80க்கும் மேற்பட்ட ஆட்டோ ஒட்டுனர்கள் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



## அம்பத்தூர் இசக்கி அம்மன் ஆலயத்தில் நான்காம் நாள் நவராத்திரி திருவிழா

மாதவரம், அக்.16-

அம்பத்தூர் அடுத்த கள்ளிக்குப்பம் ஓம்சக்தி நகரில் அமைந்துள்ள ஓம் சக்தி இசக்கியம்மன் ஆலயத்தில் நான்காம் நாள் நவராத்திரி திருவிழா ஆலய நிர்வாக செயலாளர் ஆறுமுகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்தனர்.பின்னர் கூஷ்மாண்டா தேவி ரூபத்தில் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை கொலுவாக வைத்து பஜனை உட்பட அம்மன் போற்றி பாடல்கள் பாடப்பட்டு இனிப்பு மற்றும் பழங்களை படையலிட்டு தூபதீப ஆராதனை காண்பித்து நவராத்திரி நான்காம் நாள் நவராத்திரி விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதில் ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

## சடையன்குப்பத்தில் ரூ. 2 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா

மாதவரம், அக்.16-

பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டலம் 16வது வார்டு மாதவரம் தொகுதி சடையன்குப்பம் சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூபாய் 2 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா பள்ளி தலைமை யாசிரியர் (பொறுப்பு) எஸ். தேவகிருபை தலைமையில் நடைபெற்றது.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு, மணலி மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி. ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு புதிய வகுப்ப றைகளை மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.பின்னர் குத்துவிளக்கு ஏற்றிவைத்து அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினர்.



முன்னதாக மாவட்ட வருவாய் அலுவலரும் மண்டல அலுவலருமான அரவிந்தன், மண்டலம் 2 செயற் பொறியாளர் தேவேந்திரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ராஜேந்திரன், நந்தினி சண்முகம் ,உதவி கல்வி அலுவலர் சுஜாதா, உதவி செயற்பொறியாளர்கள் தினேஷ் பாபு, மைதிலி, உதவி பொறியாளர் தனசேகரன், தவெக மாதவரம் பகுதி செயலாளர் கார்த்திக், தியாகு உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள், மாணவ-மாணவிகள், பெற்றோர்கள், தவெக கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




## குன்னூரில் அரசுக்கு சொந்தமான டேன் டீ தேநீர் கடை திறப்பு

நீலகிரி, அக்.16-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் தமிழக அரசுக்கு சொந்தமான டான் டீ அலுவலகம் தலைவர் தான் இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இதனை சுற்றி சுற்றுலா ஸ்தலங்கள் உள்ளதால் டேன் டீ நிர்வாகம் சார்பில் 12 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய தேநீர் கடை அமைக்கப்பட்டது. இதனை டேன் டீ நிர்வாக இயக்குனர் அருண் லால் மற்றும் பொது மேலாளர் தருண் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்த டேன் டீ தேநீர் கடையில சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட 10 வகையான சிறப்பு தேயிலை தூள்கள் மற்றும் தேனீர் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்த நிகழ்ச்சியில் இராவணன் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



## திருச்சியில் அப்துல் கலாமின் 95-வது பிறந்த நாள் விழா

# அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்புகள், உணவுப் பெட்டி வழங்கல் அப்துல் கலாம் நினைவாக மரக்கன்றுகள் நடவு!

திருச்சி, அக்.16-

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 95-வது பிறந்த நாளை முன்னிட்டு, திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகாவில் உள்ள அங்கன்வாடி மையத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில், அதன் நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனையின்படி இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

குழந்தைகளுக்கு இனிப்புகள், உணவுப் பெட்டி வழங்கல்!இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் பொதுச்செயலாளர் ஆதிலட்சுமி ஆனந்த்ராஜ், அங்கன்வாடி ஆசிரியர்கள் சித்ரா, காளியம்மாள், மாநில மகளிர் அணித் தலைவர் காந்திமதி, மாநில மகளிர் அணித் துணைத் தலைவர் ஜெயராணி, மாநில மகளிர் அணித் துணை ஆலோசகர் ஈஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், மாநில ஒருங்கிணை ப்பாளர் ராமு, மாநில மகளிர் அணி ஒருங்கி ணைப்பாளர் ரேவதி, பரிதா பேகம், இன்பமலர் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளின் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். அப்துல் கலாமின் பிறந்த நாளில் குழந்தைகள் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.





# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் இளைஞர் எழுச்சி நாள் மற்றும் உலக கை கழுவும் தின விழா: அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்த தலைமையாசிரியர் மாணவர்களுக்கு கை கழுவும் முறைகள் குறித்து செயல்விளக்கம்

காளையார்கோவில், அக்.16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி. ஜே. அப்துல் கலாமின் 95-வது பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாள் மற்றும் உலக கை கழுவும் தின விழா நடைபெற்றது.பள்ளித் தலைமையாசிரியர் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாணவர்களுக்கு அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு, கல்வியின் முக்கியத்துவம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

பெரிய கனவுகளைக் காண மாணவர்களுக்கு அறிவுரை!

விழாவில் பேசிய தலைமையாசிரியர் சுரேஷ், ராமேஸ்வரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த அப்துல் கலாம், தனது கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாக உயர்ந்ததை விளக்கினார். இஸ்ரோ மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் அவர் ஆற்றிய பணிகள், அக்னி, பிரித்வி உள்ளிட்ட ஏவுகணைத் திட்டங்களில் அவரது பங்களிப்பு, இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய சிறப்புகள் ஆகியவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மாணவர்கள் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவற்றை அடைய விடாமுயற்சியுடன் கல்வி கற்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

உலக கை கழுவும் தினம் மாணவர்களுக்கு செயல்விளக்கம்!

அக்டோபர் 15-ஆம் தேதி உலக கை கழுவும் தினம் கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு, மாணவர்களுக்குச் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. உணவு உண்பதற்கு முன்பும், கழிப்பறையைப் பயன்படுத்திய பின்பும் சோப்பு பயன்படுத்திக் கைகளை முறையாகக் கழுவுவதன் அவசியம் குறித்து தலைமையாசிரியர் விளக்கினார்.

முறையாகக் கைகளைச் சுத்தம் செய்வதன் மூலம் வயிற்றுப்போக்கு, டைபாய்டு, காலரா உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவும் அபாயத்தைக் குறைக்க முடியும் என எடுத்துரைத்தார்.

மேலும், சோப்பு பயன்படுத்திக் கைகளைச் சரியான முறையில் கழுவுவது எப்படி என்பதை மாணவர்களுக்கு நேரடியாகச் செய்து காண்பித்தார்.

அப்துல் கலாம் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

தொடர்ந்து பள்ளியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அப்துல் கலாமின் திருவுருவப் படத்திற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், பாரதி, மலர், தனபாக்கியம், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர்.




# கிருஷ்ணகிரி அருகே பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தில் பயனடைந்த வீட்டை கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கிருஷ்ணகிரி, அக்.16-

கிருஷ்ணகிரி அருகே பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தில் பயனடைந்த வீட்டை கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி ஒன்றியம் வெங்கடாபுரம் ஊராட்சி ஆசாத் நகரில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம் சர்பாக பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள பயனாளி சுப்பிரமணியம் என்பவரின் வீட்டில், 3.6 கிலோ வாட் திறன் கொண்ட 2 சூரிய தகடுகள் ரூ.4 லட்சத்து 40 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் மானியம் ரூ.2 லட்சம் மதிப்பில் சூரிய தகடுகள் பொறுத்தப்பட்டு, வீட்டின் பயன்பாட்டிற்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருவதை கலெக்டர் தினேஷ்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தில் ஏற்கனவே ஒன்றிய அரசு மானியம் வழங்கப்பட்ட நியையில், தற்போது மாநில அரசும் கடந்த 5.8.2026 முதல் விண்ணப்பித்த நுகர்வோர்களுக்கு மானியம் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 2677 எண்ணிக்கை இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இத்திட்டத்தினை பொதுமக்களிடையே கொண்டு செல்வதற்கு முகாம் நேற்று (14ம் தேதி) ஓசூர் மின்வாரிய செயற்பொறியாளர் அலுலகத்தில் நடந்தது. நாளை (16ம் தேதி) மத்தூர் உதவி செயற்பொறியாளர் அலுலகத்திலும், வருகிற 22ம் தேதி கிருஷ்கிரி மின் வாரிய செயற்பொறி£யாளர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

எனவே, பொதுமக்கள் இத்திட்டத்தை பயன்படுத்தி, தங்களது இல்லங்களில் சூரிய தகடுகள் பொறுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ள ப்படுகின்றனர். மேலும், சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தியை பெருக்கி, பசுமையான, ஒளிமையமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என்றார்.

இந்த ஆய்வின் போது, செயற்பொறியாளர்கள் ஜெகநாதன், பவுன்ராஜ், உதவி செயற்பொறியாளர்கள் சிதம்பரம், நளினி, பிரேம்குமார், தாசில்தார் ராஜலட்சுமி, சோலார் விற்பனையாளர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# குப்பையில்லா கிருஷ்ணகிரி நகராட்சிக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் ஆணையர் வேண்டுகோள்

கிருஷ்ணகிரி, அக்.16-

குப்பையில்லா கிருஷ்ணகிரி நகராட்சிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நகராட்சி ஆணையர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிருஷ்ணகிரி நகராட்சியை குப்பை இல்லா நகரமாக மாற்ற வருகிற 31ம் அமலுக்கு வரும் விதிகளை பின்பற்றுமாறு கிருஷ்ணகிரி நகராட்சி கமிஷனர் சேகர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி நகராட்சியின் 33 வார்டுகளில் 223 தெருக்கள் உள்ளன. இதில், 85,000-க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். தினசரி 24 டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. தேசிய பசுமை தீர்ப்பாயம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, நகர பகுதியில் எங்கும் குப்பைகள் கொட்டி வைக்கும் இடம், குப்பை கிடங்கு இருக்கக்கூடாது. இதையடுத்து வருகிற 31ம் தேதி முதல் கிருஷ்ணகிரி நகராட்சி, 'குப்பை இல்லா நகர்' மற்றும் 'குப்பை கொட்டும் இடம் இல்லாத நகரமாக' செயல்பட உள்ளது. இதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அதன்படி வீடுகளின் குப்பைகளில் சமையல், காய்கறி, பழக்கழிவுகளை பச்சை நிற தொட்டியிலும், பிளாஸ்டிக், காகிதம், துணி உள்ளிட்ட உலர்கழிவுகைகளை நீல நிற தொட்டியிலும், டயாபர், நாப்கின் போன்ற சுகாதார கழிவுகளை மஞ்சள் நிற தொட்டியிலும், பெயிண்ட், மருந்து, பழைய பேட்டரி உள்ளிட்ட சிறப்பு கவன கழிவுகளை சிவப்பு நிற தொட்டி என குப்பைகள் மற்றும் கழிவுகளை நான்கு வகைகளாக பிரித்து குப்பை சேகரிப்போரிடம் அந்தந்த குப்பைகளை வழங்க வேண்டும். குப்பைகளை தரம் பிரிக்காமல் வழங்க கூடாது. கிருஷ்ணகிரி நகராட்சிக்கு, பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கி, திடக்கழிவு மேலாண்மை திட்டம் நமது நகரத்தில் சிறப்பாக செயல்பட ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் அபராதம் மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் நகராட்சி ஆணையர் சேகர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் ஆணையத்தில் சீர்திருத்தம் அவசியம்: கிருஷ்ணகிரியில் ஜி.கே.வாசன் பேட்டி

கிருஷ்ணகிரி, அக்.16-

தேர்தல் ஆணையத்தில் சீர்திருத்தம் அவசியம் என கிருஷ்ணகிரியில் ஜி.கே. வாசன் நிருபர்களிடம் கூறினார். கிருஷ்ணகிரி மாவட்டம் போலுபள்ளியில் தனியார் பெட்ரோல் பங்க் திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் நிருபர்களிடம் கூறியதாவது: இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மீது வாக்காளர்களுக்கும் பொதுமக்களுக்கும் நாளுக்கு நாள் நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது. ஜனநாயக முறைப்படி நேர்மையாகவும் நம்பிக்கையுடனும் தேர்தல்கள் நடைபெற வேண்டு மானால், ஆணையத்தில் அவசியமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



மேலும், தர்மபுரியில் பழைய பேருந்து நிலையத்தை மீண்டும் அதே இடத்தில் உடனடியாகச் செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொப்பூர் மேம்பாலம் மற்றும் நெடுஞ்சாலைப் பணிகளைத் தீவிரப்படுத்தி, உரிய காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டும். தமிழகத்தில் எந்தத் தரப்பு மக்களுக்கும் மின்வெட்டால் பாதிப்பு ஏற்படக் கூடாது. குறிப்பாகச் சிறு, குறு தொழில்கள் பாதிக்கப்படக் கூடாது. தற்போதைய சூழலில் மின் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கவும், மின்தேவையைச் சமாளிக்கவும் அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக துறை அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். அதே போல், தமிழகத்தின் கடன் சுமையைப் படிப்படியாகக் குறைப்ப தற்கு நிபுணர் குழு அமைக்க ப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தி, மக்கள் மீது சுமை விழாதவாறு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மருத்துவப் பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலித்து, அரசு உரிய தீர்வு காணும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



■ திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டத்திற்குட்பட்ட மல்லப்பள்ளி கிராமத்தில், உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில், நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில், 135 பயனாளிகளுக்கு ரூ.1.73 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்.இ.ஆ.ப., ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி ஆகியோர் (14.10.2026) அன்று வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இளவரசன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷண குமார், வேளாண்மை இணை இயக்குநர் மணி, தோட்டக்கலை துணை இயக்குநர் தீபா, திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்/தணிக்கை) தெற்கு, ஞ.அருணாசலம், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நா.கலுசிவலிங்கம், நாட்றம்பள்ளி வட்டாட்சியர் கௌரிசங்கர் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.






# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் இளைஞர் எழுச்சி நாள் விழா: அப்துல் கலாமின் 95-வது பிறந்தநாளை முன்னிட்டு மாணவ ஆசிரியர்களுக்கு இலட்சியங்கள் மற்றும் விடாமுயற்சியின் அவசியம் குறித்து விழிப்புணர்வு!

காரைக்குடி அக்.16-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 95-வது பிறந்தநாளை முன்னிட்டு, அக்டோபர் 15-ஆம் தேதி இளைஞர் எழுச்சி நாள் விழா நடைபெற்றது. நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) மற்றும் தூய்மை இந்தியா (Swachh Bharat) திட்டங்களின் ஒரு பகுதியாக நடைபெற்ற இவ்விழாவில், இளைஞர்கள் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டிருக்கவும், கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியின் மூலம் தங்களது இலக்கு களை அடையவும் வலியுறுத்தப்பட்டது. அப்துல் கலாமின் இலட்சியங்களைப் பின்பற்ற அறிவுரை!

விழாவில் கல்வியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜே.இ. மெர்லின் சசிகலா வரவேற்புரையாற்றினார்.

பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் பி. வாசீகரன் தலைமை தாங்கி, அப்துல் கலாமின் எளிமை, உயர்ந்த இலட்சியங்கள் மற்றும் இளைஞர்களுக்கு அவர் அளித்த ஊக்கமூட்டும் கருத்துகள் குறித்து எடுத்துரைத்தார்.திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்!

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மென் திறன் பயிற்றுநர் எஸ். வினைத்தீர்த்தன், இளைஞர் எழுச்சி நாளின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

இளைஞர்கள் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக்கொள்வதுடன், தெளிவான இலக்குகளை நிர்ணயித்து, அர்ப்பணிப்பு உணர்வுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டால் வெற்றியை அடைய முடியும் என வலியுறுத்தினார்.நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும்! கல்வியியல் புல முதன்மையர் பேராசிரியர் ஜி. கலையரசன் வாழ்த்துரை வழங்கினார். இளைஞர்கள் தங்களது தனிப்பட்ட இலக்குகளை அடைவதோடு மட்டுமின்றி, சமூக முன்னேற்றத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் முக்கி யப் பங்காற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பேராசிரியர்கள், மாணவ ஆசிரியர்கள் பங்கேற்பு!

இந்நிகழ்ச்சியை டாக்டர் ஜி. ராஜேஸ்வரி மற்றும் தூய்மை இந்தியா திட்ட ஒருங்கிணைப்பாளர் ஐ. லெனின் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

முன்னாள் கல்வியியல் புல முதன்மையர் பேராசிரியர் ஜே. சுஜாதா மாலினி, கல்வியியல் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.அப்துல் கலாமின் கொள்கைகளைப் பின்பற்றி, பொறுப்புள்ள குடிமக்களாக உருவாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கவும் இவ்விழா மாணவ ஆசிரியர்களுக்கு ஊக்கமளித்தது.



## ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை திறம்பட செயல்படுத்த வேண்டும்: சிபிஐசி தலைவர் அறிவுறுத்தல்

சென்னை, அக்.16–

ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மற்றும் 57–வது ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (சிபிஐசி) தலைவர் விவேக் சதுர்வேதி தலைமை தாங்கினார். இதில், சிபிஐசி உறுப்பினர் (ஜிஎஸ்டி) சஞ்சய் மங்கல், தமிழக அரசின் வணிக வரிகள் ஆணையர் எஸ். நாகராஜன், சென்னை ஜிஎஸ்டி மண்டலத்தின் தலைமை ஆணையர் எஸ்.கே. விமலாநாதன் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள், சிபிஐசி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது. காலையில் நடைபெற்ற முதல் அமர்வில், ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மற்றும் 57–வது ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகள் குறித்து வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடந்தது. அப்போது, பிரதிநிதிகள் எழுப்பிய பல்வேறு கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

மேலும், மத்திய அரசு மேற்கொண்டு வரும் ஜிஎஸ்டி சீர்திருத்தங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்த வர்த்தகப் பிரதிநிதிகள், வர்த்தகத்தை எளிதாக்கவும், தொழில் நடைமுறைகளை மேம்படுத்தவும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து, மதியம் நடைபெற்ற இரண்டாவது அமர்வில் சிபிஐசி அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அப்போது பேசிய சிபிஐசி தலைவர் விவேக் சதுர்வேதி, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை சீராகவும் திறமையாகவும் தடையின்றியும் செயல்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அதே நேரத்தில், அரசின் வருவாயைப் பாதுகாப்பதுடன், வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் முக்கியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

## பொதுத்துறை ஊழியர்களுக்கு தீபாவளி போனஸை உடனே வழங்க அரசுக்கு அன்புமணி கோரிக்கை

சென்னை, அக்.16–

“எந்தவித வேறுபாடும் இல்லாமல் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் ஒரே அளவிலான போனஸை தமிழக அரசு உடனே வழங்க வேண்டும்,” என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் தீபாவளி கொண்டாடப்படுவதற்கு இன்னும் 3 வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில், தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் எனப்படும் மிகை ஊதியத்தை வழங்குவது குறித்து எந்த அறிவிப்பையும் தமிழக அரசு வெளியிடாதது ஏமாற்றமளிக்கிறது.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் தீபாவளி குறிப்பிடத்தக்கது. 2026–ம் ஆண்டுக்கான தீபாவளி திருநாள் வரும் நவ.8–ம் நாள் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தீபஒளித் திருநாளையொட்டி அடித்தட்டு மக்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை அனைவரும் புத்தாடைகள் அணிந்தும், பட்டாசுகளை வெடித்தும் கொண்டாடுவது வழக்கம். இதற்கு வசதியாக அரசுத்துறை அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கு முன்பணமும், போக்குவரத்துக் கழகங்கள், மின்துறை உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு முன்பணத்துடன், போனஸூம் வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது. தீபஒளித் திருநாளுக்கு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன் இவை வழங்கப்பட்டால் தான் அதைக் கொண்டு தொழிலாளர்கள் தங்களின் குடும்பத்தினருக்கு புத்தாடைகளை வாங்கி தீபாவளிக்கு தயாராக முடியும்.

ஆனால், 2026–ம் ஆண்டு தீபஒளித் திருநாளுக்கு இன்னும் 23 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில், அது குறித்த அறிவிப்புகள் எதுவும் தமிழக அரசிடமிருந்து வரவில்லை. வழக்கமாக தீபாவளிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே பொதுத்துறை நிறுவன நிர்வாகங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே பேச்சுகள் நடத்தப்படும். அப்போது தான் மிகை ஊதியத்தின் அளவை கருத்தொற்றுமை அடிப்படையில் தீர்மானித்து, ஒரு மாதத்திற்கு முன்பாக வழங்க முடியும். அண்மைக் காலங்களில் தொழிற்சங்கங்களுடன் எந்த பேச்சும் நடத்தாமல் தமிழ்நாடு மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆவின் ஆகியவற்றில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்களுக்கு 20% போனஸ், பிற பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அந்த நிறுவனங்களின் நிதிநிலையை பொருத்து 8.33% முதல் 10% வரை போனஸை அரசு தன்னிச்சையாக அறிவித்து வழங்கி வருகிறது.



தமிழ்நாட்டில் கடந்த 2004–ம் ஆண்டு முதல் கடந்த 22 ஆண்டுகளாகவே அதிகபட்சமாக 20% போனஸ் (மிகை ஊதியம்) மட்டும் தான் வழங்கப்பட்டு வருகிறது. பொதுத்துறை நிறுவன தொழிலாளர்களுக்கான போனஸ் என்பது அவர்களின் மொத்த ஊதியத்தை கணக்கிட்டு வழங்கப்படுவதில்லை. மாறாக போனஸ் கணக்கீட்டுக்கான ஊதிய உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அதன் ஆண்டு சராசரியிலிருந்து தான் 20% போனஸாக வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி குறைந்தபட்சமாக ரூ.7,000 முதல் அதிகபட்சமாக ரூ.16,800 மட்டுமே போனஸாக வழங்கப்படும் நிலையில், விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு போனஸ் அளவை உயர்த்தி வழங்க வேண்டும் என ஊழியர்கள் கோரி வருகின்றனர். ஆனால், அதை தமிழக அரசு ஏற்கவே இல்லை.

4 அல்லது 5 பேர் கொண்ட ஒரு ஊழியரின் குடும்பம் தீபாவளி கொண்டாட ரூ.7,000 அல்லது ரூ.16,800 எந்த வகையிலும் போதுமானதாக இருக்காது. ஒரு குடும்பம் மிகவும் எளிமையாக தீபாவளி கொண்டாட வேண்டும் என்றால் கூட, அதற்கு குறைந்தபட்சம் ரூ.25,000 தேவைப்படும். அதனால் தான் தீபாவளிக்கு 30%, அதாவது ரூ.25,210 மிகை ஊதியமாக வழங்க வேண்டும்; இதை பாகுபாடு இல்லாமல் அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களிலும், தற்காலிகப் பணியாளர்கள், நிரந்தரப் பணியாளர்கள் என அனைவருக்கும் முன்கூட்டியே வழங்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தி வருகிறது.

தீபாவளிக்கு போனஸ் வழங்குவதைத் தவிர்க்க முடியாது எனும் நிலையில், அதை முன்கூட்டியே அறிவித்து வழங்குவதில் தமிழக அரசுக்கு என்ன தயக்கம்? என்பது தான் தெரியவில்லை. இந்த விஷயத்தில் முந்தைய அரசுகள் கடைபிடித்த அதே அணுகுமுறையை இப்போதைய அரசும் கடைபிடிக்கக் கூடாது. தேவையில்லாமல் காலதாமதம் செய்து கடைசி நேரத்தில் போனஸ் வழங்குவதால் பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களின் குடும்பங்கள் தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாட முடியாத நிலை ஏற்படுகிறது. ரயில்வே துறையில் பணியாற்றும் 11.40 லட்சம் பணியாளர்களுக்கு 78 நாள் ஊதியம் போனசாக வழங்கப்படும் என மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துவிட்ட நிலையில், தமிழக அரசு தாமதிக்கக் கூடாது.

எனவே, தமிழக அரசின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு 30% தீபாவளி போனஸ் வழங்கப்பட வேண்டும். லாபம் ஈட்டும் நிறுவனங்கள், இழப்பை சந்திக்கும் நிறுவனங்கள், நிரந்தரப் பணியாளர்கள், தற்காலிகப் பணியாளர்கள், அவுட் சோர்சிங் ஊழியர்கள் என்ற எந்தவித வேறுபாடும் இல்லாமல் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் பணியாற்றும் அனைத்து வகையான தொழிலாளர்களுக்கும் ஒரே அளவில் போனஸை தமிழக அரசு உடனே வழங்க வேண்டும்.” என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

## அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்த ‘திறன் ப்ளஸ்’ திட்டம்: அக். 21 முதல் அடிப்படை மதிப்பீட்டுத் தேர்வு

சென்னை, அக்.16–

தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த ‘திறன் ப்ளஸ்’ திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அடிப்படை மதிப்பீட்டுத் தேர்வுகள் அக். 21 முதல் 23–ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் மொழிப் பாடம் மற்றும் கணித திறனை மேம்படுத்தும் விதமாக திறன் இயக்கம் கடந்தாண்டு அமல்படுத்தப்பட்டது.

இதற்கு பரவலாக வரவேற்பு கிடைத்ததால் தற்போது 2–ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திறன் ப்ளஸ் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் என்.லதா மற்றும் தொடக்கக் கல்வித் துறை இயக்குநர் பூ.ஆ.நரேஷ் ஆகியோர் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:



இந்தத் திட்டத்தின்கீழ் மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத் திறனில் குறைபாடுள்ள மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

10 வினாக்கள்..

இதற்காக மாணவர்களின் கற்றல் நிலையை அறியும் அடிப்படை மதிப்பீட்டுத் தேர்வுகள் (Baseline Assessment) அக்டோபர் 21 முதல் 23–ம்

தேதி வரை நடைபெறும். இந்த தேர்வானது 40 நிமிடங்கள் வரை நடைபெறும். மொத்தம் 10 வினாக்கள் இடம்பெற்றிருக்கும்.

இந்த தேர்வின் மூலம் எழுத்துகள், சொற்களை கண்டறிவதில் சிரமம் உள்ளவர்கள், வாசித்தல் மற்றும் எழுதுவதில் சிரமம் உள்ளவர்கள், எண்களை எழுதுவதிலும், வாய்ப்பாடுகள் கூறுவதிலும் சிரமப்படுபவர்கள், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற அடிப்படைச் செயல்பாடுகளில் பின்தங்கியவர்கள் கண்டறியப்படுவார்கள்.

தேர்வுக்கான வினாத்தாள்கள் https://exam.tnschools.gov.in என்ற இணையதளத்தில் முன்கூட்டியே பதிவேற்றம் செய்யப்படும். தேர்வுக்கு முந்தைய நாள் பள்ளிகள் இதை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

தேர்வு முடிந்தவுடன் வகுப்பு ஆசிரியர்கள் விடைத்தாள்களைத் திருத்தி மதிப்பெண்களை அக்.31–க்குள் எமிஸ் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அதன்பின் தேர்வாகும் மாணவர்களின் பட்டியலை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## மெட்ரோ பணிகள் நடைபெறும் இடங்களில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரம்

சென்னை, அக்.16–

பருவமழையால் பாதிப்பு ஏற்படாத வகையில், மெட்ரோ திட்டப்பணிகள் நடைபெறும் இடங்களில் தேவையான முன்னெச்சரிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: வரவிருக்கும் பருவமழை காலத்தை எதிர்கொள்வதற்காக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை மற்றும் தமிழக சாலை மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தீவிர முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் அனைத்து வழித்தடங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர் இறைக்கும் பம்புகள்

மில்லர்ஸ் சாலை, ஸ்டெர்லிங் சாலை, ஆண்டர்சன் சாலை, ஆற்காடு சாலை (போரூர் சந்திப்பு), சாஸ்திரி நகர், வில்லிவாக்கம், பெரம்பூர் (டேங்க் லிங்க் சாலை), மவுண்ட் பூந்தமல்லி சாலை மற்றும் இந்திரா நகர் உள்ளிட்ட மெட்ரோ திட்டத்தின் மூன்று வழித்தடங்களிலும், வெள்ளப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்ட இடங்களில் போதுமான திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஒக்கியம் மடுவு பகுதியில் உள்ள ஒட்டுமொத்த 98 மீட்டர் நீளப் பகுதியும் முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மழைநீர் எவ்வித தடையுமின்றி சீராக வெளியேறுவது உறுதி செய்யப்பட்டு, அப்பகுதியில் வெள்ள பாதிப்புகள் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.



## சாலையில் இனி குப்பை சிதறாது, துர்நாற்றம் வீசாது: பிரத்யேக கேப்சூல் வடிவ கன்டெய்னரில் கொண்டு செல்ல திட்டம்

சென்னை, அக்.16–

சென்னை மாநகராட்சியில் வீடுகள் மற்றும் குப்பைத் தொட்டிகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் காம்பாக்டர் வாகனங்கள் மூலம் குப்பை மாற்றும் நிலையத்தில் கொட்டப்படும்.

பிறகு அங்கிருந்து கனரக வாகனங்கள் மூலம் கொடுங்கையூர், பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்படும். இக்குப்பைகள் வழிகளில் சிதறுவதால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் சுகாதார சீர்கேட்டால் சாலைகளை ஒட்டிய குடியிருப்புவாசிகளும், வாகன ஓட்டிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போது மாநகரின் பெரும்பாலான மண்டலங்களில் தனியார் மூலம் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. வட சென்னையில் ராயபுரம், திரு. வி.க.நகர், மணலி உள்ளிட்ட மண்டலங்களில் சென்னை என்விரோ சொல்யூஷன் நிறுவனம் தூய்மைப் பணிகளை மேற்கொள்கிறது. இந்நிறுவனம் குப்பையை கொண்டு செல்லும்போது சிதறுவது, துர்நாற்றம் வீசுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க சுமார் ரூ. 35 கோடியில் புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, பிரத்யேக கேப்சூல் வடிவ கன்டெய்னர்களில் குப்பையே வெளியில் தெரியாதவாறு மூடிய நிலையில் கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளது. மேலும் குப்பைகளை அழுத்தி, அதிக அளவில் இந்த கேப்சூல்களில் கொண்டுசெல்லப்பட உள்ளது. இதற்காக பிரத்யேக குப்பை மாற்று நிலையத்தை புளியந்தோப்பில் என்விரோ நிறுவனம் அமைத்து வருகிறது. அங்கிருந்து குப்பைகளை வெளியில் கொண்டு செல்ல 10 நவீன லாரிகள், நிலையத்துக்குள் இயக்க 2 லாரிகள் என மொத்தம் 12 லாரிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

இதில், 40 கேப்சூல்கள் அன்றாட பயன்பாட்டுக்கும் 8 கேப்சூல்கள் இருப்பில் வைக்கப்படவும் உள்ளன. நிலையத்துக்கு வரும் குப்பைகளை 4 நவீன அழுத்தும் இயந்திரங்கள் மூலம் மணிக்கு தலா 35 டன் வீதம் 140 டன் குப்பைகளை கேப்சூல்களில் அடைக்க முடியும்.

## உடன்குடியில் 3,200 மெகாவாட் திறனில் புதிய விரிவாக்க மின் நிலையங்கள்: மின் வாரியம் ஒப்புதல்

சென்னை, அக்.16–

உடன்குடியில் 3,200 மெகாவாட் திறனில் புதிய விரிவாக்க மின் நிலையங்கள் அமைப்பதற்கு மின்வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு உடன்குடியில் 660 மெகாவாட் திறனில், இரு அலகுகள் (1,320 மெகாவாட்) கொண்ட அனல் மின் நிலைய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் முதல் அலகில் கடந்த செப்டம்பர் 5ம் தேதி வணிக ரீதியிலான மின் உற்பத்தி தொடங்கியது. 2 வது அலகில் இந்தாண்டு இறுதிக்குள் மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, இந்த மின் நிலையத்தின் அருகில் 660 மெகாவாட் திறனில் இரு அலகுகள் கொண்ட ‘உடன்குடி 2’ மற்றும் ‘உடன்குடி3’ ஆகிய மின் நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது அந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தலா 660 மெகாவாட் அலகுகளுக்குப் பதிலாக, தலா 800 மெகாவாட் திறனில் நான்கு அலகுகள் என, மொத்தம் 3,200 மெகாவாட் திறனில் புதிய விரிவாக்க மின் நிலையங்களை அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அண்மையில் நடந்த மின்வாரிய இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அதிகாரப்பூர்வ ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இப்புதிய மின் திட்டங்கள் அனைத்தும் பொது தனியார் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்ட ஆலோசகராக, தமிழக உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் நியமிக்க உள்ளது. இந்நிறுவனம் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ‘டெண்டர்’ ஆவணங்களை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன்குடி மின் திட்டத்தின் முக்கிய சிறப்பம்சமே, இதற்காக அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக கடல்சார் உள்கட்டமைப்பு தான். கடற்கரையில் இருந்து 7 முதல் 8 கி.மீ தூரத்திற்கு கடலுக்குள் தனியாக அமைக்கப்பட்டுள்ள நிலக்கரி இறங்குதளம் மூலமாக கப்பல்களில் இருந்து நிலக்கரி நேரடியாக இறக்கப்படும். அங்கிருந்து மணிக்கு 2,000 டன் நிலக்கரியைக் கொண்டு சேர்க்கும் அதிநவீன கன்வேயர் பெல்ட் வழியாக மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு வரப்படுகிறது. இந்த பிரத்யேக துறைமுக வசதி கொண்ட தமிழகத்தின் முதல் மின் திட்டம் உடன்குடி என்பது குறிப்பிடத்தக்கது.



## திருச்செந்தூரில் கனமழை: சிவன் கோயிலுக்குள் வெள்ளம் புகுந்தது

தூத்துக்குடி, அக்.16–

திருச்செந்தூர், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று அதிகாலை 4 மணி முதல் 7 மணி வரை 3 மணி நேரம் கனமழை பெய்தது.

இதனால், தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. திருச்செந்தூர் டி.பி.சாலையில் உள்ள 2 அரசு பள்ளிகளின் வளாகம் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு மழை நீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது.

திருச்செந்தூர் சிவன் கோயில் முதல் பிரகாரத்தில் மழைநீர் புகுந்து தேங்கி நின்றது. சுப்பிரமணிய சுவாமி கோயில் செல்லும் சாலையில் மழை நீருடன் பாதாள சாக்கடை கழிவுநீர் கலந்து ஓடியதால் துர்நாற்றம் வீசியது. இதனால் பக்தர்கள் சிரமம் அடைந்தனர். மேலும், திருச்செந்தூரை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் 3 மணி நேரத்துக்கு மேலாக மின்தடை ஏற்பட்டது.

## ஜெகன் மோகன் ரெட்டி வழக்கை தினமும் விசாரிக்கிறது நீதிமன்றம்

ஹைதராபாத், அக்.16–

ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், முன்னாள் ஆந்திர முதல்வருமான ஜெகன் மோகன் ரெட்டியின் சட்டவிரோத சொத்துக்குவிப்பு வழக்கில், அமலாக்கத்துறை தொடர்பான வழக்குகளை இனி தினந்தோறும் ஹைதராபாத் சிபிஐ நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.

ஹைதராபாத் நாம்பல்லியில் உள்ள சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு கடந்த 9 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதனிடையே ஜெகன் மோகன் ரெட்டி முதல்வர் ஆனதால், ‘முதல்வர் பதவியில் இருப்பவர் ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் ஆஜராகும் போது அரசுப் பணம் அதிகம் செலவாகிறது’ என்பதை காரணம் காட்டி நேரில் ஆஜராக விலக்கு கோரினார். நீதிமன்றமும் அனுமதி அளித்ததால் வழக்கு மந்தமானது.



ஜெகன் மோகன் ரெட்டியின் சொத்துக்குவிப்பு வழக்கை சிபிஐயும், அமலாக்கத்துறையும் விசாரித்தன. இதில் அமலாக்கத்துறையின் குற்றப்பத்திரிகை கடந்த 9 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இந்நிலையில், அமலாக்கத்துறையினர் ஆந்திர உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர். அதில், “இதுவரை ஜெகன் மோகன் வழக்கை சிபிஐ மட்டுமே விசாரித்து வருகிறது; எங்கள் துறையின் வழக்கு ஏற்கப்படவில்லை. எனவே, எங்கள் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையையும் ஏற்று, சிபிஐ நீதிமன்றம் தினசரி விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்” எனக் கோரப்பட்டிருந்தது. இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, இனி அமலாக்கத்துறையின் வழக்கையும் சேர்த்துத் தினசரி விசாரணை நடத்த வேண்டும் என உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பாக ஜெகன் மோகனின் வழக்கறிஞர்களுக்கு நோட்டீஸ் பிறப்பித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161